# 17-10-2024 செய்தி

## சாதிய வன்கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

- தேசிய பட்டியல் சாதி ஆணையத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 47,000 புகார்கள் பதிவாகியிருப்பதாகத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பெறப்பட்ட தரவுகள் தெரிவிக்கின்றன.
- பட்டியல் சாதி மக்கள் மீது காலம்காலமாக இழைக்கப்பட்டுவரும் சாதியக் கொடுமைகளுக்கு இந்தத் தகவல் சமகாலச் சான்றாகியிருக்கிறது.
- பட்டியல் சாதி மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பிடிஐ செய்தி நிறுவனம் எழுப்பிய கேள்விக்கு விளக்கமளித்து இந்தத் தரவுகளை தேசிய பட்டியல் சாதி ஆணையம் பகிர்ந்துள்ளது.
- தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான சாதியக் கொடுமைகள், நில விவகாரங்கள், அரசுப் பணிகள் சார்ந்த சிக்கல்கள் உள்ளிட்டவை முக்கிய விவகாரங்களாக இந்தத் தரவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- 2020-2021 ஆண்டில் 11,917 புகார்களும் 2021-2022 ஆம் ஆண்டில் 13,964 புகார்களும், 2022-2023 ஆண்டில் 12,402 புகார்களும், 2024 ஆம் ஆண்டில் இதுவரை 9,550 புகார்களும் பெறப்பட்டுள்ளன.
- பட்டியல் சாதி, பட்டியல் பழங்குடியினச் சமூகத்தினருக்கான தேசிய உதவி எண் மூலம் 6,02.177 புகார்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அதில் 3,10,623 புகார்கள் உத்தரப் பிரதேசத்தில் இருந்தே பெறப்பட்டுள்ளதாகவும் இந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மொத்தம் 5,843 புகார்கள் பதிவாகியிருப்பதாகவும், அவற்றில் 1,784 தீர்க்கப்பட்டுள்ளன எனவும், தேசிய பட்டியல் சாதி ஆணையத்தின் தலைவர் கிஷோர் மக்வானா தெரிவித்துள்ளார்.
- 2022 ஆம் ஆண்டில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 51,656 வழக்குகளில், உத்தரபிரதேசத்தில் பதிவானவை 12,287; அதாவது மொத்த வழக்குகளில் 23.78 சதவீதம். ராஜஸ்தானில் 8,651 (16.75%), மத்தியப் பிரதேசத்தில் 7,732 (14.97%) வழக்குகள் பதிவாகியிருக்கின்றன.
- எண்ணிக்கையில் அதிகமான சாதிய வன்முறைகள் கொண்ட பிற மாநிலங்களின் பட்டியலில் பிஹார் 6,799 (13.16%), ஒடிஷா 3,576 (6.93%), மகாராஷ்டிரா 2,706 (5.24%) ஆகியவை உள்ளன. மொத்த வழக்குகளில் கிட்டத்தட்ட 81% இந்த ஆறு மாநிலங்களில் பதிவானவை ஆகும்.
- இந்தப் புகார்களில் பாதிக்கு மேற்பட்டவை விசாரணையில் இருப்பவை என ஆணையத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனவும் சொல்லப்படுகிறது.
- தங்களுக்கு வரும் எல்லாப் புகார்களும் பரிசீலிக்கப்படுவதாக கிஷோர் மக்வானா தெரிவித்திருக்கிறார். ஆனால், தேசிய பட்டியல் சாதி ஆணையத்தின் செயல்பாடு குறித்து, பட்டியல் சாதிப் பிரச்சினைகளுக்காகக் குரல்கொடுக்கும் பலரும் அதிருப்தியல் இருப்பது மறுக்க முடியாதது.
- வன்கொடுமை வழக்குக்காக நோட்டீஸ் விநியோகிக்கும் அமைப்பு என்கிற அளவிலேயே இந்த ஆணையம் சுருங்கிவிட்டது என்கிற குற்றம்சாட்டு பரவலாக உள்ளது. இந்த ஆணையம் பரிந்துரைகளை மட்டுமே செய்யக்கூடியதாக இருப்பதாக விமர்சிக்கும் சமூகச் செயற்பாட்டாளர்கள், கொள்கை முடிவுகள், சட்டம், பட்டியல் சாதியினர் நலன் ஆகிய நடவடிக்கைகளில் ஆணையம் பங்கெடுப்பது அவசியம் என வலியுறுத்துகின்றனர்.

## 8 ஒப்பந்தங்கள்

- ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்பான ஒப்பந்தங்களின் விபரம்:

1. ஓர் பூமி, ஓர் குடும்பம், ஓர் எதிர்காலம் என்ற திட்டத்தின் முன்னெடுப்பு
2. எஸ்.சி.ஓ., ஸ்டார்ட் அப் மன்றம், ஸ்டார்ட் அப்பில் சிறப்பு பணிக்குழு அமைத்தல் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள், பாரம்பரிய மருத்துவம் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்.
3. டிஜிட்டல் பொது உள்கட்டமைப்புக்கு முன்னுரிமை அளித்தல்.
4. சுற்றுச்சூழலை பாதுகாக்க இந்தியா முன்னெடுத்துள்ள, 'லைட்' திட்டத்தை முன்னுதாரணமாக பின்பற்றுவது
5. தினை போன்ற சத்துள்ள தானியங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் வாயிலாக உலகளாவிய உணவு பாதுகாப்பை மேம்படுத்துதல்.
6. சர்வதேச சட்டம், ஐ.நா., மற்றும் எஸ்.சி.ஓ., சாசனத்தின் குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்க நியாயமான மற்றும் சீரான இணைப்பு திட்டங்களை நிலைநிறுத்துதல்.
7. உலக வர்த்தக மைய விதிகள் அடிப்படையிலான, பாரபட்சமற்ற, நியாயமான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வெளிப்படையான பலதரப்பு வர்த்தக அமைப்பை மீண்டும் வலியுறுத்துதல்.
8. பலதரப்பு வர்த்தக அமைப்பைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் மற்றும் உலகளாவிய நிலையான வளர்ச்சியைத் தடுக்கும் நடவடிக்கைகள், ஒருதலைப் பட்ச பொருளாதார தடைகள் மற்றும் வர்த்தகம் கட்டுப்பாடுகளை எதிர்ப்பது.

- தலித் மக்களுக்கு எதிரான சாதியக் குற்றங்கள் அதிகரித்துவரும் நிலையில், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவான வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படுவது கடந்த நான்கு ஆண்டுகளில் 39.2 சதவீதத்திலிருந்து 32.4 சதவீதமாக குறைந்திருப்பது மேலும் கவலையளிக்கிறது.
- தேசிய பட்டியல் சாதி ஆணையம் பெரும்பாலும் ஆளும் கட்சிகளின் அழுத்தத்தால் தூண்டப்படக்கூடியதாகப் பரவலாக விமர்சிக்கப்படுகிறது. கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டுச் செயல்பட ஆணையத்தின் நடைபெறும் நியமனம் நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- இதன்மூலம், பட்டியல் சாதியினர் மீதான வன்கொடுமைப் புகார்கள் பதிவாவது அதிகரிக்கும். முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டால் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நிச்சயம் சட்டத்தால் தண்டிக்கப்படுவார்கள்!

## மாதவிடாய் விடுப்பு அவசியமா?

- பிஹார், கேரளம் போன்ற மாநிலங்களில் மாதவிடாய் விடுப்பு இருப்பதால் தமிழ்நாட்டிலும் அப்படியான ஏற்பாடு தேவை என்று சமீபகாலமாகப் பலர் குரல் கொடுக்கின்றனர். ஆனால், மாதவிடாய் விடுப்பு அவசியம்தானா என விவாதிப்பது அவசியம்.

**உண்மை நிலவரம்**

- ஸ்பெயின், ஜப்பான், இந்தோனேசியா, தென் கொரியா போன்ற நாடுகளில் மாதவிடாய் விடுப்பு முறை உள்ளது.
- இங்கிலாந்தில் இதற்கெனத் தனி விடுப்பு இல்லை, தேவை என்றால் பெண்கள் இதை 'உடல் நலமற்ற விடுப்பு' என்று எடுத்துக்கொள்ளலாம். அதற்கென்று சட்டம் இல்லை; ஆனால், நிறுவனங்கள் அவர்களின் விருப்புரிமைப்படி வழங்கலாம், அமெரிக்காவிலும் இந்த விடுப்பு முறை இல்லை.
- பெண்களுக்குப் பருவமடைதல் (Puberty) அல்லது மாதவிடாய் தொடக்கம் (menarche) வளர்ச்சியின் ஓர் அங்கம்தான். இது தவிர மார்பகங்கள் வளர்ச்சி அடைவது, பிறப்புறுப்புகள், அக்குள் போன்ற பல இடங்களில் முடி வளர்ச்சி, ஹார்மோன் மாற்றங்களால் முகப்பரு, உடல் எடை, உயரம் கூடுதல் போன்ற மாற்றங்களுடன் மனதளவிலும் பல மாற்றங்கள் ஏற்படும்.

**பிற்போக்குக் கருத்துகளுக்கு வலுசேர்க்கும்**

- மாதவிடாய் என்பது இயல்பான ஒரு நிலை. அதற்காகச் சிறப்புச் சலுகைகள் கொடுப்போம் என்பது 'பெண் பலவீனமானவள்' 'பாதுகாக்கப்பட வேண்டியவள்' போன்ற கருத்துக்களுக்கு வலு சேர்க்கும்.
- இது ஒரு வகையில் மென் பாலினப் பாகுபாடு (benevolent sexism), பெண்களுக்கு எந்த ஒரு சமத்துவ ஏற்பாடாக இருந்தாலும், அது பாலினங்களைச் சமத்துவ நிலைக்குக் கொண்டு வந்து, பாலின இடைவெளியைக் குறைக்க வேண்டுமே தவிர, அதிகரிக்கக் கூடாது.

**எதிர்கொள்வது எளிது**

- பெண்கள் மாதவிடாயின்போது இயல்பாக இருக்க வேண்டும், குளித்துச் சுத்தமாகத் தன்னை வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதான். மற்றபடி, உடற்பயிற்சி உள்பட எல்லா செயல்பாடுகளிலும் ஈடுபடலாம். பஞ்சுத்தக்கை (tampons) எனப்படும். சாதனத்தைப் பயன்படுத்தினால் நீச்சல்கூட அடிக்கும் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்துகொள்ளலாம்.

**பெண்களுக்கு எப்போது விடுப்பு தேவை?**

- மாதவிடாயின்போது வலி என்பது 80 சதவீதம் பெண்களுக்கு இயல்பாக ஏற்படுவதுதான், பொறுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு இருந்தால், வலி நிவாரணி எடுத்துக்கொள்ளலாம். அளவுக்கு அதிகமான வலி, குருதிப் போக்கு, மன ரீதியான மாற்றங்கள் இருந்தால், அது இயல்பான நிலை இல்லை. அப்போது மருத்துவரின் சிகிச்சை நிச்சயம் தேவை.
- அவர்களின் ஆலோசனைப்படி மாத்திரைகள் அல்லது விடுப்பு பரிந்துரைக்கப்பட்டால் எடுப்பது நல்லது. இதை 'மாதவிடாய் விடுப்பு' என்றில்லாமல் 'உடல் நலனின்மை' (sick leave) என்று இருபாலருக்கும் பொதுவான விடுப்பாக இருக்க வேண்டும்.
- ஆண் பிள்ளைகள் வளர்ச்சியின் போது சந்திக்கும உடல்நலக் குறைபாடுகளின் போது ஓய்வு தேவை என்று மருத்துவர் பரிந்துரைத்தால், அவர்களும் இந்தப் பொது விடுப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**குழந்தைப் பேறு விடுப்பு எடுக்கலாமா?**

- மகப்பேறு / கர்ப்பகாலமும் இயல்பான நிலைதான், கர்ப்பத்தின் போது உடற்பயிற்சி செய்வது இயல்பு. குழந்தை பிறப்புக்குப் பிறகு ஆறு வாரங்களில் ஒரு பெண் இயல்புக்கு மாறுவார்.
- நார்வே, ஸ்வீடன் உள்ளிட்ட ஸ்காண்டிநேவிய (scandinavian) நாடுகளில் பேறுகால விடுப்பு இல்லை. மாறாக, 'பெற்றோர் விடுப்பு' என்று இருபாலருக்கும் பொதுவான விடுப்பு உண்டு. ஆணோ பெண்ணோ யார் வேண்டுமானாலும் இந்த விடுப்பை எடுத்துக் கொள்ளலாம்.
- தாய்ப்பால் எடுக்கும் கருவி மூலம் (breast pump) எடுத்துக் குழந்தைக்காக வைத்துவிட்டு பெண்கள் வேலைக்குச் செல்லலாம். அதைக் குளிர் பெட்டியில் வைத்து, குழந்தைக்குப் பாலாடை மூலம் தந்தை கொடுக்கலாம். தமிழ்நாட்டில் மகப்பேறு விடுப்பு ஒரு வருடம் என்பது பெருமைக்குரிய ஒன்று, ஆனால், ஒரு ஆணும் பெண்ணும்தான் பெற்றோர் ஆகின்றனர் என்பதால், குழந்தை / மகப்பேறு பெண்களின் வேலை என்று ஒதுக்காமல் இருபாலரும் விடுப்பு எடுத்துக்கொள்ளலாம் என்கிற சட்டம் வேண்டும்.

**மாதவிடாய் விடுப்பு வந்தால் என்ன ஆகும்?**

- பாலின இடைவெளி அதிகரிக்கும். பெண்களுக்கு மென் பாலினப் பாகுபாடு நடக்கும். 'அவளுக்கு மாதவிடாய்...... அப்படித்தான் கத்துவாள்' என்று மாதவிடாய் சார்ந்து பெண்கள் பற்றிய தவறான புரிதல்கள் வலியுறுத்தப்பட்டு, பெண்களை மேலும் அடிமைப்படுத்தும் போக்கு அதிகரிக்கும்.
- பல பெண்கள் வேலை செய்யும் இடத்தில் யாருக்கு மாதவிடாய் என்று ஊருக்கே தெரியும் அளவுக்கு இந்த விடுப்பு அமையும், பெண்களை மாதவிடாயின் போது ஒதுக்கி வைக்க வேண்டும் என்று பேசுபவர்களுக்குச் சாதகமாகவும் மாறக்கூடும். மாதவிடாய் தொடர்பான புரிதல்களுக்கு, உடல் சார்ந்த கல்வி – உடலுறவு சார்ந்த கல்வி தேவை (Sex education) மாதவிடாய் என்பது இயற்கையானது என்று புரிந்துகொண்டால், அதற்கெனப் பிரத்யேக விடுப்பு தேவையில்லை என்பதையும் புரிந்து கொள்ளலாம்!